Registered as a Newspaper

New Master Institute
B.M.C. Lane, JAFFNA.
AL 89
Saturday & Sunday
★ ZOOLOGY ★
திரு. நாகநாதன்
8-30 சுவாசத்தொகுதி நடைபெறுகிறது.
11-30 நாம்புத் தொகுதி விரைவில் ஆரம்பம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.2-00

New Master Institute
B.M.C. Lane, JAFFNA
A/L 89
Saturday & Sunday
★ PHYSICS ★
திரு: வர்ணம்
அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.
புதிய பிரிவு ஆரம்பம்
July 2nd

மடல்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆனி 01 புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 29 (15 - 6 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 106

முச்சந்தி முரளி



தேர்தலை நிறுத்த முடியாத சட்டத்திலே மாகாண சபையை இயங்காமல் மறிக்க இது ஒரு ஆரம்பமோ பின்னே..!

## ★ உடனடி யுத்த நிறுத்தம் செய்து

# விடுதலைப்புலிகளுடன் பேச

# புளொட் உமா வலியுறுத்து

### பிரபாவை வீழ்த்துவதற்கு ஸ்ரீலங்கா நினைக்கக் கூடாது!

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு, கிழக்கில் அமைதி திரும்பவேண்டுமானால்- இந்திய அரசு எந்தவித முன் நிபந்தனையுமில்லாமல் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்.

— இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் திரு. க. உமாமகேஸ்வரன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எமக்குக் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் ஓர் இயக்கத்தை அழிக்கவும் அடிபணிய வைக்கவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் கைகட்டிக்கொண்டு பார்த்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரபாகரனின் வீழ்ச்சியே தனது வெற்றியென ஸ்ரீலங்கா அரசு நினைக்குமானால் அது இந்த நாட்டில் அமைதியின்மை என்பதையே நிரந்தரமாக வைத்திருக்க விரும்புகிறது என்றே பொருள்கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் அமைதி நிலை ஏற்படுத்துவதற்கான வழிவகையாக ஐந்து அம்சத் திட்டம் ஒன்றை திரு. உமா மகேஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக கடந்த 7 ஆம் திகதியிட்டு அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்சப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் வந்தாலும் வராவிட்டாலும் ஜூலை மாதம் வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை அங்கு ஜனநாயக ஆட்சிமுறை மறுக்கப்பட்டு, சிவில் நிர்வாக அமைப்பு சீர்குலைந்து போய் மிக நீண்டகாலமாகி விட்டது. கடந்த ஐந்து வருட காலமாக நடந்து வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்தப் பிரதே

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி, கோப்பாய் கலாசாலைகளின் பரீட்சை கொழும்பில்!

கொழும்பு ஜூன் 15

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் 1987 நவம்பரில் நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்ற

[6 ஆம் பக்கம் பார்க்க]

### லைசென்ஸ் பெற மேலும் அவகாசம்

கொழும்பு, ஜூன் 15

வர்த்தக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள், அதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான கால எல்லை மேலும் 6 மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த ஆண்டு இறுதிவரை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளர் திரு. எம். வாமதேவன் அறிவித்தார்.

ஏற்கனவே பெறப்பட்ட அனுமதிப் பத்திரங்களும் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தான் அமுலுக்கு வருமென்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## கதிர்காமத்தில் நேற்று மோதல்

கொழும்பு, ஜூன் 15

கதிர்காமத்தில் நேற்று அதிகாலை நடந்தமோதல் ஒன்றில் தீவிரவாதிகள் மூன்றுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

உதவிப் பொலிஸ் அதிபர் பத்திரான தலைமையில் பொலீஸ் கோஷ்டி ஒன்று ரோந்து சென்ற சமயம் தீவிரவாதக் கோஷ்டி ஒன்றின் தாக்குதலுக்கு இலக்கானது.

பொலீஸாருக்கும் அக்கோஷ்டிக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் மூன்று தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்றும் பொலீஸ்தரப்பில் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் வெலிகம என்னுமிடத்தில் பிரேமதாஸ என்ற அரசு ஆதரவாளர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பருத்தித்துறையில் பூரண ஹர்த்தால்

வடமராட்சி, ஜூன் 15

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

கடைகளோ, பாடசாலைகளோ எதுவும் திறக்கப்படவில்லை. வங்கிகள் மற்றும் அலுவலகங்கள் மூடிக்கிடந்தன. சந்தைகளும் இயங்கவில்லை.

மந்திகை ஆஸ்பத்திரிக்கு அப்பால் வாகனம் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை.

கடந்த முதலாம் திகதி பருத்தித்துறையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து இந்திய அமைதிப் படையினர் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல்களை

(6 ஆம் பக்கம் பார்க்க

## நகரில் நேற்றே வெள்ளைக்கொடி

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ் நகரின் பல பகுதிகளிலும் நேற்றே வெள்ளைக் கொடிகள் பறக்கத் தொடங்கிவிட்டன.

சைக்கிளில் சென்ற சிலரும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர். வீதிகளின் குறுக்காகவும் கொடிகள் பறந்தன. (ஒ-51)

# வடக்கு, கிழக்கு எங்கும் இன்று வெள்ளைக் கொடித்தினம்

### யுத்த நிறுத்தம், பேச்சுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவிப்பர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வெள்ளைக் கொடித் தினம் இன்றுநிட்டமிடப்பட்டதுபோல் வடக்கு, கிழக்கு எங்கும் நடைபெறும்.

உடனடி யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் ஆகியவற்றைத் தமிழ்பேசும் மக்கள் ஏகோபித்து ஆதரிக்கிறார்கள் என்பதை இந்தியாவுக்கு எடுத்துக் காட்டுமுகமாகவே இக் கொடித்தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டம் குறித்து ஏற்கனவே யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் பொது அமைப்புகளுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எல். கல்கத்துக்கும் அவர் இது தொடர்பாக அறிவித்துள்ளார்,

இன்றைய கொடித்தினத்தில் வடக்கு கிழக்குமாகாணங்களிலுள்ள மாணவர்களும் வெள்ளைப்பட்டி அணிந்து பாடசாலைக்குச் செல்வர். அரச ஊழியர்களும் அவ்வாறே செல்வர்.

வர்த்தக நிலையங்களிலும், வீடுகள் மற்றும் ஸ்தாபனங்களிலும், வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்படும்.

பல பொது அமைப்புகளும், பொது ஸ்தாபனங்களும், தொழிற்சங்கங்களும், பிரசைகள் குழுக்கள், அன்னையர் முன்னணிகள் போன்ற சமூக நல இயக்கங்களும், வெகுஜன அமைப்புகளும் வெள்ளைக் கொடித் தினத்தை ஆதரித்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

(ஒ-10)

## மாகாண சபை உறுப்பினர் கொலை!

கொழும்பு, ஜூன் 15

மாகாணசபை உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

வட மத்திய மாகாண சபை உறுப்பினராக திரு. டி.பி. சிரிசேன (வயது-60) அண்மையில்தான் தெரிவு செய்யப்பட்டிருந்தார்,

பொலன்னறுவையைச் சேர்ந்தவர் இவர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான இவர், பொலன்னறுவையில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இதற்கு முதல் மாகாணசபை வேட்பாளர்கள் தான் சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

## முல்லைத்தீவில் கறுப்புக்கொடிகளும் நேற்றுப் பறந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 15

முல்லைத்தீவில் நேற்றும் கறுப்புப்பட்டி இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட்டது. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன;

நேற்றைய போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர் என்று இங்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வெலிஓயா சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தவும் அகற்றவும்வேண்டும் என்பதே கறுப்புப்பட்டி இயக்கத்தின் முக்கிய கோரிக்கையாகும்.

முல்லைத்திவு மாவட்ட பிரசைகள் குழுவினால் இந்தக் கறுப்புப்பட்டி இயக்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை

(6 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

15—6—1988
ஆனி 1
புதன்கிழமை
சுபநேரம்:
4.23 முதல் 5.53 வரை
ராகுகாலம்:
11.53 முதல் 1.23வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### திங்கள் சம்பவத்தை அடுத்து

## விஸ்வமடுப் பகுதி நேற்றுச் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

விஸ்வமடுப் பகுதி நேற்று இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அமைதிப்படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஒருசில ஜவான்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சென்னையில் இன்று

# சிவாஜி உண்ணாவிரதம் ஈழத் தமிழர்களுக்காக!

சென்னை, ஜூன். 15

தமிழக முன்னேற்ற முன்னணித்தலைவர் திரு. சிவாஜிகணேசன் சென்னையில் இன்று உண்ணாவிரதம் இருப்பார் என்று அறிவிக்கப்படுகிறது.

முன்னணியின் அவசர செயற்குழுக் கூட்டம் சென்ற 7 ஆம் திகதி சென்னையில் தியாகராய நகர் கிராஞ்சலி ஹோட்டலில் நடந்தது. அப்போது இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்மானம் வருமாறு: இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க விரிவான திட்டங்களுடன் இந்திய-இலங்கை உடன்பாடு காணப்பட்டது

உடன்பாட்டை அமுலாக்கவும் ஸ்ரீலங்கா இராணுவக் கொடுமையில் இருந்து இலங்கைத் தமிழரைப்பாதுகாக்கவும் மத்திய அரசு அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது.



சிவாஜி

தமிழர்களுக்கான தனி மாநிலம் அமைத்துத் தருவது என்ற திட்டத்தை அமுலாக்க இந்திய அரசு எந்த நிபந்தனையையும் ஸ்ரீலங்கா அரசிடம் விதிக்கவில்லை.

அதற்கு மாறாக ஸ்ரீலங்கா இராணுவ, பொலீஸ் கொடுமைகளில் இருந்து தமிழர்களைப் பாதுகாப்பதற்கு என்று கூறப்பட்ட இந்திய அமைதிப்படை செற்பட்டுவரும் விதத்தை செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

* ஜெயவர்த்தனாவின் பாசிச கொள்கைகளை எதிர்த்து இடைவிடாது போராடிவந்த பிரபாகரனை உயிரோடு தீர்த்துக் கட்டும் முயற்சியில் இந்திய அரசு திட்டமிட்டுச் செயற்படுவதை இச்செயற்குழு வன்மை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வீதி மறியல், ஊர்வலம்

### வடமராட்சியில் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸின்) மறியல் எதிர்ப்பு நடவடிக்கைகள், ஊர்வலங்கள் என்பன நாளை வடமராட்சிப் பகுதியில் திட்டமிட்டபடி நடைபெறும் என அறியவருகிறது

இதற்கான சகல ஒழுங்குகளையும் ஈரோஸ் இயக்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பனவற்றை வலியுறுத்தி ஈரோஸ் இயக்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மறியல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஊர்வலங்களையும் நடத்தி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக நாளை வடமராட்சியில் எதிர்ப்பு நடவடிக்கைகளாக காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை சகல அரச தனியார் நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும், நெல்லியடிச்சந்தி, மாலுசந்தி, மந்திகைச் சந்தி, பருத்தித்துறை உடுப்பிட்டிச் சந்தி, கலிகைச் சந்தி, வல்லை ஆகிய முக்கிய சந்திகளில் வீதியோரம் நின்று-

உடனடி அமைதி காணக் கோரிப் பிரசார நடவடிக்கைகளும், துண்டுப் பிரசுர விநியோகமும் மறியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

மாலுசந்தியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் நெல்லியடியில் முடிவு பெற்று அங்கு பொதுக்கூட்டமும் நடைபெறும் இக் கூட்டத்தில் ஈழவர் முன்னணி உறுப்பினர்கள், பிரசைகள் குழு உறுப்பினர்கள், முக்கிய அரசியல் பிரமுகர்களும் உரையாற்றுவர்.

(ஒ-10

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம் வகுப்புகள்

## விற்பனைக்கு

சகல விதமான ரேடியோ வீடியோ டெக் T. V ஆகியவற்றின் உதிரிப்பாகங்களை [வீடியோ Head, I. C ரான்சிஸ்டர், அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றை] மலிவான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள். R. V சென்ரர் F. 6 முதலாவது மாடி நவீன சந்தை யாழ்ப்பாணம். [4234]

நல்ல நிலையிலுள்ள அமெரிக்கன் ஜெனரேற்றர் (300 w) கடைத் தேவைக்குரிய முதிரை கண்ணாடி ஷோ க்கேஸ் [4'-0 X 3' 0 X 2' - 6'] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 'வசந்தி எலெக்றிக்கல்ஸ்' பழைய பொலீஸ் நிலையம் முன்பாக 110, கே. கே எஸ் வீதி, சுன்னாகம். (4232)

சிறிய திருத்த வேலைகளுடன் கூடிய போட்டோஸ்ரற் இயந்திரம் புதிய மின்சார ஒட்டும் ரான்ஸ் போமர் (Welding Transformer) வயர் கோல்டர் உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சு. தர்மேந்திரன் 'சௌசி வாசா' நுணுவில் மேற்கு சாவகச்சேரி. [4448]

Lohaman இல சிகப்பு முட்டையிடும் ஒரு நாள் கோழிக்குஞ்சு யூலை மாத முதல் வாரத்தில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யப்படும். விபரங்களுக்கு M G. M. Forage Stores 208. 1st Cross st. Jaffna [4218]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின் ஹோல் செற் சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, சோகேஸ், காரியாலய மேசைகள், மீன்தொட்டி, Hot Plate, Dinner Set, கிராம், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும் பல உடன் மலிவு விற்பனைக்கு M. தியாகராஜன் 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிக்ஸ் சந்தி அருகில்) (4388)

Lohmann வெள்ளை சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

நவாலி அரசடிச் சந்தியில் இருந்து கல்லுண்டாய் போகும் வீதியில் 400 யார் தூரத்தில இருபக்க ஒழுங்கை கிணறு, மின்சார வசதியுடன் கூடிய நிலப்பரப்பு 11½ முழுதாகவோ அல்லது துண்டுகளாகவோ விற்பனைக்குண்டு தொடர்பு திருமதி விரசிங்கம் கந்தரோடை வீதி சுன்னாகம். [4221]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (4151)

## விற்பனைக்கு

எங்கள் ஸ்தாபனத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவை மிகவும் மலிந்த விலையில் விற்கப்படும். 1. G I Fittings, 2 Brass Screws 3. Brass Gate Locks. 4. Mammotties Jaffna Type, 5 Spare Parts for Hullers தொடர்பு: சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட் 206, 208 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C/5437]

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4073)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு மாதத்தில், அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (Lohmann) பிறவுண் சேவல் குஞ்சுகள் 22-06-88 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. No. 9, கந்தையாலேன், [குராவத்தை றோட்டு] சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [4226]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co Shabra அருகாமையில் (C 5300)

## தேவை

யாழ்நகரில் அமைந்திருக்கும் எமது ஸ்தாபனத்திற்கு தையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை தொடர்பு C/o 231, உதயன் யாழ்ப்பாணம். (4229)

நல்ல நிலையில் உள்ள, கொண்டா CG-125 மோட்டார் சைக்கிள் தேவை. தொடர்பு கொள்ளவும். க. சிவசுப்பிரமணியம். சட்டத்தரணி ஊரெழு. சுன்னாகம் [4230]

வெல்டிங் வேலை, கேட் கிறில் வேலை, சுருக்கு கேட் வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. நேரில் வரவும் தாசன் ஹாட்வெயர் 225, ஸ்ரான்லி ருேட், யாழ்ப்பாணம் (4231)

### களவாடப்பட்டது

T. விநாயகலிங்கம் இல: 4 கச்சேரி கிழக்கு ஒழுங்கை என்னும் பெயர் விலாசத்தையுடைய எனது New Hero Ladies Bike No, Fc61316 வீட்டில் நிற்கும் போது பூட்டினபடி களவாடப்பட்டது. தயவு செய்து தகவல் தெரிந்தவர்கள் மேலுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [4233]

### காணவில்லை

வேலணை மேற்கு பத்மநாதன் சுமதி என்பவராகிய எனது தபால் அடையாள அட்டை கைதவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ராதிகா ஜுவலரி 222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றேன். [4236]

## வகுப்புகள்

Radio-TV, Air Conditioning-Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வைண்டிங், பிளம்பிங், Typing புதியபிரிவுகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall. 328 நாவலர் றோட் [ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம். (4225)

108 Brown Road, Jaffna A/L 88 வெப்ப இரசாயனம் ஆரம்பம் [17-06-88] வெள்ளி மாலை 4 30 p m ஆசிரியர், சத்தீஸ் இவ்வாசிரியரின் வெப்ப இரசாயன நூல் வெளி வந்து விட்டது. (4227

### விறைத்தாள்வகுப்புகள்

ஆண்டு 5, ஆண்டுப் புலமைப்பரிசில் வினாத்தாள் வகுப்புகள் [Paper Class] ஆரம்பம் 15-06 88 புதன்கிழமை ஆண்டு5 -4 30 மணி ஆண்டு 6 - 5 30 மணி வாரத்தில் மூன்று வகுப்புகள் நடைபெறும். வினாத்தாள்கள் அச்சடித்து வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். (4235)

### ரோனியோ- தட்டச்சு

தமிழ்- ஆங்கில தட்டச்சு Typewriting ரோனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல 138, நாவலர் ரோட், மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம். (C5296)

---

தீவுப்பகுதி மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

# மத்திய கிழக்கு வேலை வாய்ப்புகளிற்கு ஆட்கள் உடன் தேவைப்படுகின்றனர்

| | தொகை | சம்பளம் |
|---|---|---|
| ★ காரியதரிசி (Secretary) | 20 | 60 KD |
| ★ ஆட்டோ எலெக்ரீசியன் | 15 | 50 KD |
| ★ கார்பென்டர் & பெயின்டர் | 22 | 50 KD |
| ★ மெக்கானிக்குகள் | 17 | 50 KD |
| ★ கடிகாரம் திருத்துநர்கள் | 11 | 50 KD |
| ★ ரேடியோ தொழில் நுட்பவியலாளர் | 09 | 50 KD |
| ★ சேர்ட்டின் தயாரிப்போர் | 08 | 50 KD |
| ★ பெண் தையற்காரர்கள் | 14 | 40 KD |
| ★ மர வேலைக்காரர்கள் (Carpenters) | 20 | 50 KD |
| ★ பெயின்டர்கள் | 20 | 40 KD |
| ★ டெயிலர்கள் மெஷின் ஒப்பரேட்டர்கள் | 60 | 60 KD |
| ★ இன்டோர் கிளீனர்ஸ் (ஆண்கள்) | 200 | 35 KD |
| ★ இன்டோர் கிளீனர்ஸ் (பெண்கள்) | 100 | 30 KD |
| ★ பணிப்பெண்கள் | 100 | 30 KD |
| ★ ஹவுஸ் டிரைவர்கள் | 50 | 40 KD |
| ★ கனரக வாகன ட்ரைவர்கள் | 25 | 60 KD |
| ★ குழாய் வேலைக்காரர்கள் (Plumpers) | 2[illegible] | 40 KD |

1. நம்பிக்கையான சேவை
2. விரைவான பிரயாணம்
3. முற்பணம் இல்லை
4. சகல ஒழுங்குகளும் செய்தபின் பணம்.

உடன் விபரங்களிற்கு தொடர்பு கொள்ளவும்:

**S. பரமசிவம்**
வெளி
வேலணை கிழக்கு
வேலணை - 5


கொழும்பு பிரதான முகவர்:

**Horizon Enterprises**
**No. 9, 19th Lane, Kollupitiya.**
**COLOMBO - 3.**

Labour Licence No. 609
Ap. prov No. AL / 609 / 9 / 88 AL / 609 / 6 / 88 [4290]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**உயர் திரு வல்லிபுரம் மாணிக்கம்**
[முன்னாள் அதிபர், முன்னாள் தலைவர் வலிகிழக்கு [வ ப] ப. நோ. கூ. ச அச்சுவேலி]

தோற்றம்: 03 - 06 - 1908 திருநிழல்: 16 - 05 - 1988

வறுமையில் நீ உறுதி காத்தனை,
வளத்தின்போது நல் எளிமை காத்தனை,
பொறுமை காத்தனை பதவி வேளையில்
பொறுப்புக்கள் வர நேர்மை காத்தனை
துறைதோறும் நீ செய்த தொண்டினில்
தூய்மை காத்தனை, எம்மைக் காத்தனை
சிறகுள் வைத்து, ஐயா உன் நினைவை எம்
சிந்தை என்றும் காக்கும், நீ சாந்திகொள்
தங்களின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''மாணிக்கபுரி''
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(4292)

---

## விற்பனை நிலைய மாற்றம்

**Sakura Photo Suppliers**
**சகுரு போட்டோ சப்ளையர்ஸ்**

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எதிர்வரும் 17ஆம் திகதி (17-06-1988) வெள்ளிக்கிழமை தொடக்கம் எமது விற்பனை நிலையத்தை யாழ் பஸ் நிலைய முன்பாகவுள்ள இலக்கம் 14, யுபிலி டவரில் (ராணி சினிமா அருகாமை) இடமாற்றியுள்ளோம்.

Konica கலர் பிலிம்ஸ், பிறின்டிங் பேப்பர் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கொம்பியூட்டர் மூலம் சிறந்த முறையில் கலர் பிலிம் Processing செய்து ஒரு கிழமையில் கொடுக்கப்படும்.

Sakura Photo Suppliers,
14, Jubilee Bazaar, JAFFNA.
[4283]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 1931-04-04
இறப்பு: 19.8-05-17

**அல்பிறெட் ராசரெட்ணம்**

சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்
எங்களுக்காக நீதியின்பால் துன்புறுத்தப்பட்ட அன்பான யேசுவே நோயினால் பீடிக்கப்பட்டு நினைவை இழந்து சடுதி மரணம் அடைந்த உமது தாசனை உம்மோடு கூடப் பரகதியில் வீற்றிருக்கக் கிருபை கூர்ந்தருளும்.

அன்புச் சகோதரர்,
மருமக்கள்.
[illegible]
யாழ்ப்பாணம்.
(4288)

---

கனேடிய பல்கலைக்கழக
**· அனுமதி பெற்றார் ·**



இலங்கையைச் சேர்ந்த செல்வன் சிவ. தவவிநாயகன் அவர்கள் கனேடிய அரச நிர்வாக சேவையில் பதவி வாய்ப்பினைப் பெற்று அரச நிதிஉதவியுடன் மேற்படி பொது நிர்வாக சேவைக்குரிய பட்டப்படிப்பு நெறிக்கான பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்

இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் யா/நயினை இளைப்பாறிய கிராம சேவையாளர் அமரர் திரு. சிவப்பிரகாசம், திருமதி கமலம்மா- சிவப்பிரகாசம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரென்பது குறிப்பிடத்தக்கது

(4449)

---

# கொம்பியூட்டர் பயிற்சி

மீண்டும் யாழ்நகரில்!

**Diploma in Data Processing & Computer Programming in BASIC & COBOL**

Languages Course இற்கான புதிய பிரிவுகள்:

பிரிவு-1 : 18-06-1988 [9.30 a.m.]
பிரிவு-2 : 25-06-1988 [2.00 p.m.]

- ★ Practicals உலகப் புகழ்பெற்ற I.B M. Super/XT Computerகள் உட்பட பல Computerகளில் File Handling, Project Work உட்பட பல்கலைக்கழக மாணவர்களுக்கேற்ப B B C. Basic உம் மிகத் தரமான முறையில் பயிற்றப்பட்டு முடிவில் Inter Link Group Certificates தகுதி அடிப்படையில் வழங்கப்படும்.
- ★ வேறிடங்களில் 'Basic' என பயின்றும், File Handling, Project, Graphic போன்றவை செய்யாதோருக்கு I B.M. Computerகளில் சலுகை முறையில் Special Training அளிக்கப்பட்டு Training Certificate வழங்கப்படும்.
- ★ வெளியார் வேலைகளுக்கு Programme தயாரித்தளிக்க இருப்பதால் IBM WANG Computerகளில் Trainee Programmers போன்றோர் தேவையாதலால் விண்ணப்பங்களைச் சொந்த கையெழுத்துப் பிரதியில் அனுப்பவும்.
- ★ சேரும்போது செலுத்த வேண்டியது ரூபா 400/- மட்டுமே.

தெல்லிப்பளை கிளையிலும், கரவெட்டி கிளையிலும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

Administrative Office:

**IDP**
**Institute of Data Processing**
K.K.S.Road — (சிவன் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

(C/5423)

★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவோர்

# கல்விச் சான்றிதழ் பெற முடியாது அவதி

புதுக்குடியிருப்பு, ஜூன் 15

ஆரம்பஆசிரியர் பதவிக்கு நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றுமாறுகோரப்பட்டவர்கள தமது கல்விச் சான்றிதழைப் பெற முடியாது திண்டாடுகின்றனர்.

புதுக்குடியிருப்புக்கிராமத்தில் இருந்து பலர் ஆரம்ப ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறுகேட்கப் பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால பாடசாலைகள் சேதமாக்கப்பட்டதுடன் அங்கேவைக்கப்பட்டிருந்த ஆவணங்களும் உடைத்து நொருக்கப்பட்டன.

இவற்றின் விளைவால் மாணவர்களது கல்விச் சான்றிதழ்களும், முக்கிய ஆவணங்களும் தொலைந்து போயுள்ளன.

இந்நிலையில் பாடசாலையில் பயின்று சித்திஅடைந்த மாணவர்கள் கல்விச் சான்றிதழ்களைப் பெற முடியாது அவதிப்படுகின்றன. (இ-126)

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவும்

வலி,வடக்கில்அசம்பாவிதங்களால் சேதமுற்ற பாடசாலைகளுக்கு தளபாட வசதிகளை செய்துகொடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர்பாதுகாப்புநிதியம் நிதியுதவிசெய்யஉள்ளது.

வலி வடக்கில் 15 க்கு மேற்பட்ட பாடசாலைகளில் தளபாடங்கள்சேதமடைந்து மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலையில் இருப்பதை வலி வடக்கு பிரசைகள்குழுக்களின் ஒன்றியம் சுட்டிக் காட்டியிருந்தது

இதை அடுத்து ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இப்பாடசாலைக்கு தளபாடங்களை வழங்க நிதியுதவி செய்ய முன்வந்துள்ளது (இ-68)

## 87 குடும்பங்களுக்கு மாதம் தோறும் உணவுப் பார்சல்

காங்கேசன்துறை, ஜூன் 15

வலி வடக்கில் மாத வருமானம் எதுவுமின்றி கஷ்ட நிலையில் வாழும் 87 குடும்பங்களுக்கு மாதந்தோறும் உணவுப் பொருள்களைக் கொண்ட பார்சல்களை வழங்க சர்வோதயம் முன்வந்துள்ளது.

கடந்த கால வன்செயல்களால் உயிர்,உடமைகளை இழந்து மிகவும் கஷ்டமான நிலையில் உள்ள குடும்பங்களுக்கே இந்த உணவுப் பொருள்கள் அடங்கிய பார்சல்கள் வழங்கப்பட உள்ளன.

அத்துடன் அநாதைகள் விதவைகள் ஆகியோருக்கு மாத வருமானத்தை ஈட்டித்தரும் வகையில் மாடு வளர்க்கவும், கோழிப்பண்ணை நடத்தவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம உதவி செய்ய முன்வந்துள்ளது

வலி வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியத்தின் சிபார்சிற்கு அமைய இந்நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளன. (இ-168

## வாடகை செலுத்துவதில் சலுகை

ஊர்காவற்றுறை, ஜூன் 15

ஊர்காவற்றுறை பட்டண நவீன சந்தையில் வர்த்தகம் செய்யும் கடைச் சொந்தக்காரர்களுக்கு வாடகை செலுத்துவதில் சலுகை அளிக்கப்படவிருக்கின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின விசேட ஆணையாளரும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். சிவரத்தினம் இது சம்பந்தமாக வர்த்தகர்களை அழைத்து ஓர் சந்திப்பு நடத்தவுள்ளார்

இச் சந்திப்பில் கடந்த அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்ட கடைச் சொந்தக்காரர்களுக்கு சில குறிப்பிட்ட மாதங்களுக்கு வாடகை செலுத்துவதிலிருந்து விதிவிலக்களிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது [இ-16]

## துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் பலி

இந்தியப்படையின் பாதுகாப்பிலிருந்த இளைஞரொருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார். இச்சம்பவம் அண்மையில் கிரான் குளம் முகாமில் இடம்பெற்றது.

குருமண்வெளி வாசியான கணேசன் திருச்செல்வம் (26 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

தமது பாதுகாப்பிலிருந்து தப்பியோட முயன்ற சமயம் இவர் சுடப்பட்டதாக இந்தியப் படைதரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## பனைவளம் மூலம் தீவுப்பகுதியை அபிவிருத்தி செய்யலாம்

வேலணை, ஜூன் 15

தீவுப்பகுதியிலே பனைவளம் அதிகம் காணப்படுகின்றது. இப பனைவளத்தின் மூலம் இப்பகுதி பனைச் சொந்தக்காரர்கள் உற்பத்திகளை பெருக்கி பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தீவுப் பகுதியை அபிவிருத்தி செய்யலாம்.

வேலணை கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. கே. கணேசலிங்கம் இப்படிக் கூறினார்.

பனை அபிவிருத்திச் சபையின் தீவுப்பகுதி தெற்குப்-பிரிவு அலுவலகமும்,கொள்வனவு விற்பனவு பயிற்சி நிலைய திறப்பு விழாவும் வேலணை வங்களாவடியில தனியார் நிலையம் ஒன்றில் சபை இயக்குநர் திரு. எஸ். பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றன.

கிராமசேவை அலுவலர் திரு. கே.கணேசலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று திறக்கப்படும் இந்த நிலையம தீவுப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இதனால் தீவுப்பகுதி மக்கள் உள்ளூர் உற்பத்திகளை இந் நிலையத்தில் சுலபமாக சந்தைப்படுத்த முடியும்.

தொழிலின்றி இருக்கும் யுவதிகள் பலர் இந் நிலையத்தில் தொழில் வாய்ப்பைப் பெற சந்தர்ப்பம் உண்டு என்றார்.

பனை அபிவிருத்திச் சபை இயக்குநர் திரு. எஸ். பாலசிங்கம் தமது தலைமையுரையில் பனை வளர்ப்போருக்கான மானியம் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கின்றதுஎன்றார்.

திறப்பு விழாவில் பனை அபிவிருத்திச் சபை இயக்குநர் திரு. எம். எஸ். அலெக்ஸ்சாந்தர் ஆயுள் வேத வைத்தியர் திரு த. இளங்கோவன்,ஆசிரியர் திரு. ச. மாணிக்கவாசர், கிராம சேவை அலுவலர் திரு.என் சுந்தரராஜன் உட்பட பலர் உரையாற்றினர். (167)

### கைதாகி விடுதலை

குருநகர் கடற்கரை வீதியில் அரச காணியில் கட்டடம் அமைப்பதில் ஈடுபட்டிருந்த இரு கட்டடக் கலைஞர்கள் இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் வெள்ளியன்று இடம் பெற்றது. [இ-51

## கைதடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி முற்றாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

கைதடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பன முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதடிசரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கசிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோது கசிப்பு உற்பத்தியாளர்களினால் தாக்கப்பட்டு கடுமையான காயங்களுக்குள்ளான எமது நிலைய உறுப்பினர்களிடம் கசிப்பு உற்பத்தியாளர்கள் மன்னிப்புக் கோரியதுடன்கசிப்பு உற்பத்தியை இனிமேல் தொடர்வதில்லை என உறுதிமொழியும் வழங்கியுள்ளனர்.

மேலும் எமதுசனசமூக நிலையம் கைதடி அண்ணமார் ஆலயத்தில் வழமையாக நடைபெற்றுவரும் ஆடுவெட்டும் நிகழ்ச்சியையும்ஆலயநிர்வாகத்துடன் தொடர்புகொண்டு நிறுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

## கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையை மீண்டும் இயங்கவைக்க ஏற்பாடு

வடபகுதியில் தடைப்பட்டிருந்த கூட்டுறவுக் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த அனுமதி கிடைத்துள்ளதை அடுத்து இக்கல்வி நடவடிக்கைகளை தொடர ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

வடபகுதியில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கும், கூட்டுறவுப் பயிற்சியைப் பெற தகைமை உடையவர்களுக்கும் யாழ்ப்பாணம்கூட்டுறவுப் பயிற்சி கலாசாலையில் மூன்று பயிற்சிகள் விரிவுரைகள இடம் பெற்று வந்தன.

எனினும் பின்னர் ஏற்பட்ட சூழ் நிலைகளால் கடந்த சிலஆண்டுகளாக இப் பயிற்சிக்கலா சாலை இயங்காமல் இருந்து வந்தது.

இக்கலாசாலையைமீண்டும் இயங்க அனுமதிக்க வேண்டுமென யாழ். தேசியகூட்டுறவுச் சபை, தலைமைப் பீடத்தைக் கோரியிருந்ததன் பயனாக அண்மையில் கொழும்பில் இடம் பெற்றதேசிய கூட்டுறவுச்சபைமாநாடு ஒன்றில இக்கலாசாலை மீண்டும் இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதை அடுத்துஇக்கலாசாலையை மீண்டும்இயங்க வைக்க யாழ். தேசிய கூட்டுறவுச்சபை ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளது. (இ-58)

★ திருமண அழைப்பிதழ் ★

நிகழும் விபவ வருடம் ஆனி மாதம் 2ம் நாள் [16 - 6 - 1988] வியாழக்கிழமை பகல் 11 . 45 மணி தொடக்கம் 12. 30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரன் செல்வன் தவராஜா அவர்களுக்கும்

எமது புத்திரி செல்வி ராகினி அவர்களுக்கும்

446/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் திருமணம் நடைபெறவுள்ளதால், உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வழைப்பை ஏற்று, திருமண வைபவத்திற்கு குடும்ப சமேதராய் சமுகம் தந்து மணமக்களை ஆசிர்வதித்து விருந்துபசாரந்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

திருமதி க. இராசரத்தினம்
"வேல் வாசா"
சித்தன்கேணி.

திரு. திருமதி பூ. க. நடராசா
"ராஜஸ்தான்"
குரும்பசிட்டி, தெல்லிப்பழை

(4289)


# முன் மாதிரிபயிற்சிப் பரீட்சை

## PROTO - TYPE PRACTICE EXAMINATION

க. பொ. த. (உயர்தரம்) - 1988

## G. C. E. [A/L] - 1988

பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி 20-06-1988 (திங்கள்)
பரீட்சை ஆரம்ப திகதி:- 29-06-1988 (போயா தினம்)
பரீட்சை முகவர்கள்:-

01. யாழ்ப்பாணம்,
New Master Institute, Becon. Nagalingam Institute, Shamrock.
பூபாலசிங்கம் புத்தகசாலை Bond Book Stall — யாழ்ப்பாணம்.
Express — இருபாலை, Radiant — அரியாலை, — Alpha கல்வியங்காடு;
Keen — திருநெல்வேலி, Modern Commerce — பருத்தித்துறை,
P. U. C. Personal Classes — நெல்லியடி V. K. M, V. M. K.—வல்வெட்டித்துறை,
Becon — உடுப்பிட்டி. குகன் அச்சுவேலி, Unique — தெல்லிப்பளை.
Bond —சித்தன்கேணி, Vtc — வேலணை.
Higher Education Centre — சாவகச்சேரி.
02. கிளிநொச்சி,
திரு. மரியதாஸ் — சாந்தி நிகேதன்.
03. வவுனியா,
திரு. வேதலிங்கம் Commerce — Centre வயிரவர் புளியங்குளம்.
04. மன்னார்,
திரு. Lawrence — Zahira Education Centre
05. திருகோணமலை
திரு. ரமணன், திரு, கண்ணன் — சாந்தி நிகேதன் — வித்தியாலய வீதி.
06. மட்டக்களப்பு,
திரு. ஸ்ரீரங்கன், திரு. ஜேசுதாசன் — Bond Institute — மத்திய வீதி.
07. கல்முனை.
திரு ஸ்ரீதர் (Noname A to Z Lets learn, Brilliant)
08. அக்கரைப்பற்று.
திரு. அமீன் (Education Centre Mega, Cambirdge, Oxford, Tharul Shuban)

| நேரம் | விஞ்ஞானம் | வர்த்தகம் | கலை |
|---|---|---|---|
| 1988-06-29 புதன் | காலை PHY I<br>மாலை PHY II | ACC I<br>ACC II | GEOGRAPHY I, II, III |
| 1988-06-30 வியாழன் | மாலை CHE I | ECON I | சங்கீதம் |
| 1988-07-01 வெள்ளி | மாலை CHE II | ECON II | நடனம் |
| 1988-07-02 சனி | காலை BOT I<br>PURE I<br>மாலை BOT II<br>PURE II | LOGIC I<br>LOGIC II | LOGIC I<br>LOGIC II |
| 1988-07-03 ஞாயிறு | காலை ZOO I<br>APP I<br>மாலை ZOO II<br>APP II | COM I<br>COM II | POL SC I<br>POL SCICNCE II |
| 1988-07-04 திங்கள் | | | காலை தமிழ் I<br>மாலை தமிழ் II |
| 1988-07-05 செவ்வாய் | | | காலை இந்து நாகரிகம் I<br>கிறிஸ்தவ நாகரிகம் I<br>(R C / NON R C<br>இஸ்லாமிய நாகரிகம் I<br>மாலை இந்துநாகரிகம் II<br>கிறிஸ்தவ நாகரிகம் II<br>(R C / NON R C)<br>இஸ்லாமிய நாகரிகம் II |
| 1988-07-06 புதன் | காலை ஆங்கிலம் I<br>மாலை ஆங்கிலம் II | | |

பரீட்சை இலக்கு:

★ ஆண்டுதோறும் மாணவரை பிரதான பரீட்சைக்கு தயாராக்கல் - அனுபவமளித்தல்.
தமிழ்ப்பகுதி எங்கும் உள்ள மாணவரை மதிப்பீடு செய்தல்
★ இதனைக் கொண்டு முன்னேற்றமடைய வேண்டிய மாணவர்க்கு - ஆவன செய்தல்.
★ ஆண்டுதோறும் G. C. E. [A/L], G. C. E. (O/L), ஆண்டு 6 (புலமைப் பரிசில்) பரீட்சைகளுக்கான முன்மாதிரி பயிற்சி பரீட்சை நடாத்தப்படும்.

விபரங்கட்கு:


Examination Unit
Bond Institution
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்தாபிதம்: 1972

(C-5452)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாமாண்டு நினைவஞ்சலி



இராசையா ஸ்ரீபத்மநாதன்
(மதி)
வீரஜனனம்: 24 - 12 - 1960
வீரசுவர்க்கம்: 15 - 06 - 1987

மாவிலியம்பதியில் உதித்து, சிறியெனும் நாமம் புனைந்து, காந்தியக் கொள்கைதனை கொண்டவரே நீர் மாறியதேனோ! தமிழன்னை கண்ணீர் கண்டும், இன்னல்கள் பலவும் கொண்டு, வேங்கைகள் கூட்டம் சேர்ந்து மதியெனும் நாமஞ்சூடி, களம் பலவுங்கண்டு தமிழன்னை மானம் காத்து, பாரதி வகுத்த முத்தமிழ் காப்பதே என்தன் மூச்சு. என்றுமே வாழும் போதில், குரும்பையூர் மினி முகாமை முன்னின்று அழிக்கும்போது, நெஞ்சிலே குருதி சிந்தி, நீங்காத புகழும் கொண்டு தமிழன்னை கண்ணீர் சிந்தச் சென்றீரோ எம்மை விட்டு!!

வான்மதியழிந்திட்டாலும், எம்மதியே உம் நினைவு எம் நெஞ்சை விட்டகல என்றுமே முடியாதையா!! சிந்திக்கும் போது தானும், எம் சிந்தையே கலங்குதையா!!!

இங்ஙனம்
உற்றார், உறவினர், நண்பர்கள்,
(4432)

## 153 ஆவது நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிரியையும்



சின்னத்துரை சிறிராசா
அன்னை மடியில் - 21-2-56
காலன் கரத்தில் 13-1-88

ஒப்பிலாத் திலகமே காலம் தவறினும் எங்கள் உள்ளம் விட்டகலாதவனே, உன் ஆன்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மகள்
சகோதரர்கள், மாமி
மச்சான் மச்சாள்
நண்பர்கள
(4443)

T. இந்திரநாதன்
M Three Travels
அளிக்கும்

# மத்திய கிழக்கு
## ★ வேலை வாய்ப்பு ★

எமது சேவை தூய்மையானது
துரிதமானது

### ● உடனடி பிரயாண வாய்ப்புக்கள்

★ வைகாசி முற்பகுதியில் கடவுச் சீட்டு தந்த 80 பேர் 2-6-88ல் பிரயாணம் செய்துவிட்டார்கள்.

★ 23-5-88ன் பின் கடவுச்சீட்டு தந்தவர்கள் 8-6-88, 10-6-88ல் 52பேர் பிரயாணம் செய்து விட்டார்கள்.

★ என்னிடம் கடவுச் சீட்டுத் தந்தவர்கள் 43 பேர் இன்னும் 2 கிழமைகளில் பிரயாணம் செய்யப் போகிறார்கள்.

★ கீழ்க்காணும் வேலை வாய்ப்புகள் தற்சமயம் என்னிடம் உண்டு உடனடியாக கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு முன்பக்கப் பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும் 2 கிழமைகளில் பிரயாணம் எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.

### [I] சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| [1] | பாரமரிப்பு கிளீனேர்ஸ் [Maintenance Cleaners] | 550 றியால் |
| [2] | கிளீனிங் கூலியாட்கள் [Cleaning Labourers | 500 றியால் |
| [3] | கனரக வாகன சாரதிகள் Equipment Drivers | 800 றியால் |

21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
OPEN VISA [திறந்த விசா]

| | | |
|---|---|---|
| [1] | விவசாய மேற்பார்வையாளர் (Agricultural Supervisors) விவசாய கூலியாட்கள் (Agriculturial Labourers | 500 றியால் |

(25 வயதுக்கு மேற்பட்டவர்கள்)

### [II] குவைற் (Kuwait)
பொது கிளீனேர்ஸ்

### [III] மத்திய கிழக்கு நாடுகளுக்கு
House Maids
[பணிப்பெண்கள்]

உங்களுக்கு சேவை செய்ய
திரு. T. இந்திரநாதன்
காத்திருக்கிறார்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
T. இந்திரநாதன்
M Three Travels
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி:- 763, 764, 769.
[C-5442]


# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

அச்சுவேலி, ஜூன் 15

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலச்சம்பவங்களினால் பயிர்ச் செய்கை பாதிக்கப் பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பணமாகவும், விவசாய உபகரணங்கள், உரம் கிருமி நாசினி போன்ற பொருள்களாகவும் இந்த நிவாரணம் வழங்கப்பட உள்ளது

விவசாய அடையாளக் கார்ட் உள்ள விவசாயிகள் தமதுபயிர்ச்செய்கை நிலங்களுக்குஉரியவரியை வருடாவருடம்செலுத்தி விவசாயிகளாக பதிவு செய்திருந்தால் விவசாயிகள் பாதிப்பு நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம் என்றுகூறப்படுகின்றது. (இ-11)

# ஆனையிறவு விளையாட்டு கழகம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 15

கதிரவேற்பிள்ளை நினைவுக் கிண்ணத்துக்காக நடைபெற்ற உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் ஆனையிறவு விளையாட்டுக்கழகம் 2-1 கோல்களால் கிளிநொச்சி இளம் பறவை விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்தது.

இறுதிப்போட்டி கூட்டுத்தாபன விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

கடந்த ஆண்டு இலங்கை இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையில் பிராந்திய அலுவலகத்தில் வைத்துக் கொல்லப்பட்ட பிரதம கணக்கு எழுதுவினைஞர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையின் முதலாவது நினைவு தினத்தை ஒட்டி இச்சுற்றுப் போட்டியை கூட்டுத்தாபன ஊழியர் நடத்தினர்.

ஆனையிறவு தபால் அதிபர் திரு பஞ்சலிங்கம் தலைமை வகித்தார்.

அமரர் கதிரவேற்பிள்ளையின் சகோதரரான ஆசிரியர் திரு. எஸ். நடேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினராக உப்புக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு எஸ். வேலாயுதபிள்ளை கலந்துகொண்டார்

உற்பத்தி முகாமையாளர் திரு ஏ. கே. தங்கராஜா பேசுகையில், வெளிநாடுகளில் கௌரவிக்கப்படுவது போல இலங்கையிலும் விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்,

உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தம் செய்தார், திரு. நடசபிள்ளை, திரு. வேலாயுதபிள்ளை ஆகியோர் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளை வழங்கினர். (இ-எ)

# பொது நூலகம் பிரதேச சபை பணிமனையில்

புதுக்குடியிருப்பு, ஜூன், 15

புதுக்குடியிருப்பு பொது நூலகம் தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் உப அலுவலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலச் சம்பவங்களால் நூலகம் சேதமடைந்ததால் கடந்த 5 மாத காலமாக நூலகம் இயங்க முடியாது இருந்தது. (இ-94)


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா - குவைத்
OPEN VISA (25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

சவூதி அரேபியா Farmers
சம்பளம் 500 + 100
ஒப்பந்தம் 3வருடம் [10 நாட்களுக்குள் பயணம்]

சவூதி அரேபியா
றெயில்வே கிளீனேர்ஸ்
பாடசாலை கிளீனேர்ஸ்
எயர் போர்ட் கிளீனேர்ஸ்
சம்பளம் 350 + 100
சாரதி H V 600 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்

குவைத் -
ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
இன்ரநாஷனல் கிளீனேர்ஸ்
சம்பளம் 30 K D
ஒப்பந்தம் 2 வருடங்கள்

சவூதிக்குப் போக கடவுச்சீட்டு தந்தவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.
காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்.

தொடர்பு:
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரதநிலைய வீதி
சுன்னாகம்.

கிளை இல 1
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
மயிலங்காடு,
ஏழாலை.
(C- 5432)

# டுபாய்

அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்
பின்வரும் இடங்களுக்கு தகுதியானவர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள்

| | | No. | | |
|---|---|---|---|---|
| (1) | எலெற்றிகல் என்ஜினியர் | 2 | 900 | US$ |
| (2) | எலெக்றிக்கல் மேற்பார்வையாளர் | 1 | 400 | ,, |
| (3) | கச்சுவேலை மேற்பார்வையாளர் | 2 | 400 | ,, |
| (4) | கம்பி வளைப்பு மேற்பார்வையாளர் | 2 | 400 | ,, |
| (5) | கம்பி வளைப்போர் | 5 | 250 | ,, |
| (6) | உதவி கம்பி வளைப்போர் | 10 | 175 | ,, |
| (7) | லீட்மான் லேபர் போமன் | 2 | 250 | ,, |
| (8) | உதவி லீட்மான் | 10 | 200 | ,, |
| (9) | எலெற்றிசியன் | 4 | 250 | ,, |
| (10) | உதவி எலெற்றிசியன் | 5 | 200 | ,, |
| (11) | பிளம்பர் | 4 | 250 | ,, |
| (12) | வெல்டர் | [illegible] | 250 | ,, |
| (13) | பெயின்றர் | 5 | 250 | ,, |

உடன் கொழும்பு செல்ல வேண்டியிருப்பதால், உடன் தொடர்பு கொள்ளவும்.

## குவைற்

| | | No | |
|---|---|---|---|
| [1] | H V. D - றைவர் - கல்ப்லைசன்ஸ் | 15 | 65 K.D |
| [2] | L. V. D. - றைவர் - ,, ,, கல்ப்லைசன்ஸ் இல்லாதவர்களும் கருதப்படுவர் | 15 | 50 K.D |
| [3] | கட்டட வேலையாட்கள் (மேசன், தச்சுவேலையாளர், கம்பிகட்டுவோர்) | 100 | 65 K.D |
| [4] | பிளம்பர் | 10 | 65 K.D |
| [5] | கார் மெக்கானிக்குகள் (டீசல், பெற்றோல்) | 5 | 70 K.D |
| [6] | வாகன எலெக்றிசியன் | 10 | 70 K.D |
| [7] | ஸ்பிறே பெயின்ரேஸ் | 10 | 70 K.D |
| [8] | கிளீனேஸ் | 100 | 35 K.D |

## HOUSE MAID

| | | No. | |
|---|---|---|---|
| (1) | சிங்கப்பூர் | 50 | 200 D |
| (2) | குவைத் | 25 | 40 K.D |
| (3) | சவுதி | 25 | 400 S.R |
| (4) | அபுதாபி | 25 | 400 D.R |

உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
K. லிங்கம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செவம்
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.
(C- 5456)

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர்க் கல்வி

★ Computer Programming in Basic Language

சனி, ஞாயிறு வகுப்புகள்:- 25-06-88 பயிற்சிக்காலம் 2 மாதம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்:- 01-07-88 பயிற்சிக் காலம் 40 நாள்
கட்டணம் 750/- [இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்]
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி 1 B.M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுநாள் 24- 06- 88

UNIKCO COMPUTER CENTRE,
No: 5 மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[உப தபாற் கந்தோர் அருகாமையில்]
[C/5458]

## லிபியாவில் வேலை வாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| Ray Welders | - ரூ 7,000.00 |
| Ray வெல்டிங் சுப்பவைசர் | - ரூ 10,000.00 |
| Steel Fabricating சுப்பவைசர் [பைப்ஸ்] | - ரூ 10,000.00 |

சம்பளம் அனுபவத்திற்கு ஏற்ப கணிக்கப்படும். வெளிநாடு போய் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மூன்று கிழமைக்குள் போகலாம். ஒருகிழமைக்குள் விசாவுக்கு அனுப்பவேண்டி இருப்பதால், பாஸ்போட்டுடன் 3 படம், சான்றிதழ்களுடன் உடன் தேரில் வரவும்.

ந. பாஸ்கரன்
இந்திராணிஏஜென்ஸி
(சேவிஸ் ஸ்ரேசன் முன்பாக)
நெல்லியடி
Licence No [illegible] (4276)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

பொருள்:
அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாகும்.


# உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-398/தொலைவர் வீதி, தொலைபேசி 24605
யாழ்ப்பாணம். 23078
15-06-1988 5 பேட் இதழ்


## உணர்ந்திடும் தேவை உண்டு

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் பகுதியில், தமிழ்க் கிராமங்களை இல்லாமல் அழித்துவிட முயற்சிகள் நடந்து வருகின்றன!

அப்பகுதியில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அட்டகாசம் புரியத் தொடங்கியுள்ளனர். ஆண்டாண்டு காலமாக அங்கு குடியிருக்கும் தமிழ் மக்களின் வீடுகளை உடைக்கிறார்கள். தமிழர்களுக்குத் தொல்லைகளும் கொடுத்து வருகிறார்கள்.

சுருக்கமாகச் சொல்வதானால் ஸ்ரீலங்கா இராணுவம் தனது சொந்தக் குணத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. தனது வழமையான அடாவடித் தனங்களைப் புதுப்பித்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி வடக்கிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடத்தியே ஆவது என்ற சிங்களப் பேரினவாதிகள் வெறிக்குத் துணைபோகும் பழைய கைங்கரியத்தை மீள்வித்து உள்ளது!

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் சிங்கள மக்களைக் குடியேற்றுவது என்பது மண் அபகரிப்புக் குற்றமாகும்; அடாத்தாகும்; அத்துமீறலாகும்; ஆக்கிரமிப்பாகும்.

தமிழர்களை அவர்தம் சொந்த மண்ணில் இருந்து விரட்டி அடிப்பது அதைவிட அட்டூழியமும், அநியாயமும் நிறைந்தது ஆகும்.

பலஸ்தீனத்தில் இருந்து அந்த மண்ணின் சொந்த மக்களை விரட்டி அடித்துவிட்டு, இஸ்ரவேல் ஆக்கிரமிப்புச் செய்ததால்தான் பலஸ்தீனியப் போராட்டம் ஆரம்பமாகியது. பலஸ்தீனியப் போராட்டம் உலகளாவிய ரீதியில் ஆதரவு பெற்று வரும் உலக நடப்பியல் விவகாரங்களில் ஒன்றாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது நடந்து வருவது — அவர்களது தாயகம் ஆக்கிரமிக்கப்படுவது—அபகரிக்கப்படுவது - பலஸ்தீனியருக்குப் பல வருடங்களுக்கு முன்னர் நடந்ததை ஒத்தது.

ஈழத் தமிழ் மக்களின் மிக மிக அடிப்படைப் பிரச்சினைகளாக — எல்லாவற்றையும் விட முதன்மைத்துவப் பிரச்சினைகளாக — இருப்பவை மண் அபகரிப்பும், பாதுகாப்புமே ஆகும்.

பலஸ்தீனப் பிரச்சினையும், ஈழத் தமிழர் பிரச்சினையும் வேறுபட்டவை என்று காட்டும் விதத்தில், மூடிமறைக்கும் விதத்தில் ஸ்ரீலங்கா அரசு வெகுசாதுரியமாக நடந்து வருகிறது. செய்கிற அட்டூழியத்தையும், அநியாயத்தையும் செய்து கொண்டு, எதுவுமே தெரியாத நல்லவன் போல ஆசாடபூதித்தனம் போட்டு வருகிறது அது.

அதன் ஆசாடபூதித் தனத்தை நேரில் கண்டு கொள்ளக் கூடிய நல் வாய்ப்பு இந்தியாவுக்கு மட்டுமே கிடைத்துள்ளது, ஆம்; திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையும், தமிழர்களை அவர்களது சொந்த மண்ணில் அகதிகளாக்குவதையும், விரட்டி அடிப்பதையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது படைகள் மூலம் எவ்வளவு கனகச்சிதமாகச் செய்து வருகிறது என்பதை தமது சொந்தக் கண்ணாலே பார்க்கும் பாக்கியம் இந்திய அமைதிப்படையினருக்குக் கிடைத்துள்ளது:

இத்தகைய சூழ்நிலையில் மண் அபகரிப்பு பாதுகாப்பு ஆகியவற்றில் உறுதியான அதிகாரமும் நிலைப்பாடும் இல்லாமல் தமிழ் மக்கள் எவ்வாறு சுயாட்சி நடத்த முடியும்? இந்தியா இது குறித்துச் சற்று ஊன்றி ஆராய்ந்து உணர்தல் அவசியம்.

இந்த இரண்டு விடயங்களிலும் உரிய அதிகாரங்கள் இல்லாத மாகாண சபைகள் பயனற்றவை என்று தமிழ் மக்கள் கருதுவது எவ்வளவு அர்த்த புஷ்டியானது என்பதையும் இந்தியா சிந்தித்துப் பார்த்து உணர்தலும் அவசியமே.

## தி.மு.க. ஆட்சிக்கு வருவதுஉறுதிஎன்கிறார் இதயம் பேசுகிறது ஆசிரியர்

சென்னை, ஜூன் 14

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவதுஉறுதி! ''இதயம் பேசுகிறது'' ஆசிரியர் மணியன் இப்படிச் சொன்னார்.

பட ஆரம்ப விழாவொன்றில்திரு.மணியன் பேசியதாவது;

பத்திரிகையில் வருகிற பேச்சுக்களை படித்து உள்ளபடியே தமிழ்நாட்டில் இப்படியும் பேசுகிறார்களா? ''என்று என்னிடம் கேட்டனர்.

அதற்கு நான் ''எங்களால் அச்சடிக்கமுடியாத அளவுக்குக் கூட பேசுகிறார்கள்'' என்றுசொன்னேன். அவர்கள் வருத்தப் பட்டு விட்டு பிறகு ஒன்று சொன்னார்கள்.

தரக் குறைவான அரசியல் பேசாமல், பண்புள்ள அரசியல்நடத்தும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

நீதித்துறையில் ஒரு சாதனை:

# புகைபிடித்து உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 12 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு

## சிகரெட் கம்பனிக்கு அமெ. நீதிமன்றம் உத்தரவு!

வாஷிங்டன், ஜூன் 14

புகைத்ததினால் ஏற்பட்ட சுவாசப்பைப் புற்றுநோயினால் மரணமடைந்த ஒரு பெண்ணின் குடும்பத்துக்கு 4 லட்சம் டாலர் பணத்தை நட்ட ஈடாக வழங்கும்படி சிகரெட் கம்பெனிஒன்றுக்கு அமெரிக்க நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

புகைத்ததினால் சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்பட்டது என்பதை முதன்முதலாக நீதிமன்றம் ஒன்று ஏற்றுக் கொண்டது இதுவே முதல் தடவை என்று அறிவிக்கப்படுகிறது

திருமதி அன்ரோனியோ சிப்லொக் சுவாசப்பையில் ஏற்பட்ட புற்றுநோயினால் 1984 இல் உயிரிழந்தார்.

அந்தப்பெண், அமெரிக்காவில் உள்ள சிகரெட் கம்பெனி ஒன்று தயாரித்த சிகரெட்டையே பாவித்து வந்தார்.

புகைத்தது காரணமாகவே அவருக்கு சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்பட்டது அதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார்.

சிகரெட்டை உற்பத்தி செய்து விற்பனைக்கு விட்ட கம்பெனி மீது பெண்ணின் குடும்பத்தினர் நஷ்ட ஈடு கோரி வழக்குப் போட்டனர்.

சுவாசப்பை புற்றுநோய்க்கு சிகரெட் குடித்ததுதான் காரணம் என்றும் ஆகவே சிகரெட் கம்பெனி நஷ்ட ஈடு தரவேண்டும் என்றும் பெண்ணின் உறவினர்கள் வாதாடினர்.

அவரின் மரணத்துக்கு அவரே காரணம் என்று சிகரெட் கம்பெனி வாதாடியது.

இறுதியில் நீதிமன்றம் பெண்ணுக்கு 4 லட்சம் டாலர் பணத்தை (இலங்கைப் பணத்தில் 12 கோடி ரூபாய்) நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்று சிகரெட் கம்பெனிக்கு உத்தரவிட்டது.

சிகரெட் கம்பெனி மீது சுமத்தப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரித்தது

''பிரதிவாதியான சிகரெட் கம்பெனி ஏனைய சிகரெட் நிறுவனங்களுடன் சேர்ந்து மக்களைத் தவறான வழியில் நடத்திச் சென்றது'' என்பதே நிராகரிக்கப்பட்ட குற்றச்சாட்டு.

தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக சம்பந்தப்பட்ட சிகரெட் கம்பெனி அறிவித்திருக்கிறது [எ]

தென் ஆபிரிக்க கறுப்பு இனத்தலைவர்

## மண்டேலாவுக்கு ஆதரவு தெரிவித்து லண்டனில் 500 மைல்பாதயாத்திரை

லண்டன், ஜூன் 13

தென் ஆபிரிக்கச் சிறையில் கடந்த 26 வருடங்களாக அடைக்கப்பட்டு இருக்கும் கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு ஆதரவு தெரிவித்து லண்டனில் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

கிளாஸ்கோவில் இருந்து லண்டன் நோக்கி ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரையில் 25 பேர் கலந்து கொள்கின்றனர் இந்த பாதயாத்திரை லண்டனை வந்தடைய ஐந்து வாரங்கள் செல்லும் என்று அறிவிக்கப்படுகின்றது.

கிளாஸ்கோவுக்கும் லண்டனுக்கும் இடைப்பட்ட தூரம் 600மைல்களாகும்.

நெல்சன் மண்டேலாவின் 70 ஆவது பிறந்த தினவிழா அடுத்த மாதம் வருகிறது. இது சம்பந்தமாக சென்ற வாரம் பி.பி.சி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பொப்பிசை விழா ஒன்றை நடத்தி நிறவேற்றுமையை எதிர்க்கும் நிறுவனங்களுக்காக நிதிசேகரித்தது. அப்போது2½ லட்சம் பவுண் நிதி சேகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் கிளாஸ்கோவில் பத்தாயிரம் பேர் கொண்ட கூட்டம் ஒன்றில் தென்ஆபிரிகச் கிறிஸ்தவ மத குரு ஒருவர் பேசுகையில்,

தென்ஆபிரிக்கச் சிறையில் சித்திரவதைக்குள்ளாகும் குழந்தைகள் வெள்ளை இனத்தவராக இருப்பின், பிரதமர் தாட்சரின் நிலைப்பாடு வித்தியாசமானதாக இருக்கும் என்று கூறினார். (எ)

## தமிழ்நாடு சட்டசபை தேர்தலை டிசம்பர் வரை ஒத்திவைக்க கோரிக்கை!

தமிழ் நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடத்தவிருப்பதை வரும் டிசம்பர் மாதம் வரை ஒத்திப் போடுமாறு தேர்தல் கமிஷனுக்கு, தமிழ்நாடு உபயோகிப்பாளர் இணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் ஆளுநர் ஆட்சியின் கீழ் மாநில நிர்வாக சீரமைப்பு பணி முழு வேகத்தில் நடைபெற்று வருவதால் அதற்கு உதவியாக தேர்தலைஒத்திப் போடுமாறு அது கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களின்விருப்பமும் இதுவே, என்று அது குறிப்பிட்டுள்ளது தேர்தலை ஒத்திப்போடுவது குறித்து மாநில அளவில் ஒரு வாக்கெடுப்பு நடத்தினால் பெரும்பாலான மக்கள் தேர்தல் ஒத்திப் போடுவதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றும் அது தெரிவித்துள்ளது

இது தொடர்பாக உபயோகிப்பாளர் சம்மேளனத் தலைவர் வி. முத்துவேலன் ஒரு மனுவைத் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பியுள்ளார். (எ)

## வெளி உலகில்

சோவியத் யூனியனில்

## ஆர்மேனியா - அஸர்பைஜான் நெருக்கடி தீவிரமடைகிறது

மாஸ்கோ, ஜூன் 14

சோவியத்யூனியனில் உள்ள இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான பிரதேசத்தகராறு இறுகி வருவதாக அறிவிக்கப்படுகிறது

அஸர்பைஜான் மாநிலத்தில் உள்ள கரபா பகுதியை ஆர்மேனியா மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்று ஆர்மேனிய மக்கள் ஆர்ப்பாட்டங்களை தினமும் நடத்தி வருகின்றார்கள்.

நேற்று முதல் அவர்கள் பொது வேலைநிறுத்தத்தையும் ஆரம்பித்தனர்.

கரபா பகுதியை விட்டுக் கொடுக்க முடியாது என்று அஸர்பைஜான் மக்கள் மறுத்து விட்டார்கள்

ஆர்மேனிய மக்களின் கோரிக்கையை ஆர்மேனியா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் ஆதரிக்கிறார்.

பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர் மத்தியில் பேசுகையில், கரபா பகுதி ஆர்மேனியாவுக்கே சொந்தம் என்று வலியுறுத்தினார்.

கரபா பகுதியை ஆர்மேனியாவுக்கு கொடுக்க முடியாது என்று அஸர்பைஜான் மாநிலக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் அறிவித்து விட்டார்.

இதனால் நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது

மாஸ்கோவில் உள்ள சோவியத் தலைமைப் பீடம் கரபா பகுதியை ஆர்மேனியாவுக்குக் கொடுக்க முடியாது என்ற நிலையையே எடுத்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது (எ)

### கட்டடங்கள் உடைப்பு

பஞ்சாப் மாநிலத்தில் பொற்கோயிலைச் சுற்றி உள்ள கட்டடங்களை உடைக்கும் வேலை முழு மூச்சுடன் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது

பொற்கோயிலில் இருந்து 30 மீட்டர் பிரதேசத்தினுள் இருக்கும்சகல கட்டடங்களும் உடைக்கப்படுகின்றன மொத்தம் 562 கட்டடங்கள் அப்பிரதேசத்தில் உள்ளன.

## சொல் - பொருள் நயம்

### ததும்பும் கவிதாஞ்சலி வெளியீட்டு விழாவில் உரை

குருநகர், ஜூன் 15

ஓவியர் ஒருவர் தூரிகையினால் படம் தீட்டினால் எத்தனை அழகாக வர்ணங்கள் தீட்டப்படுமோ அவ்விதமாக கவிஞர் தேவதாஸன் சொல்நயம், பொருள் நயம் ததும்ப இக்கவிதாஞ்சலியைப் பாடியுள்ளார்.

பாஷையூர் கவிஞர் தேவதாஸனால் பாடப்பெற்ற ''பாமகுடம்'' கவிதாஞ்சலி சிறுநூல் வெளியீட்டுவிழா பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெற்றது. வைபவத்தில் கலந்து கருத்துரை வழங்கிய பலாலி ஆசிரிய கல்லூரி விரிவுரையாளர் திரு. துரை ஆரோக்கியதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு எவ். செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பாஷையூர் பங்குத்தந்தை வண பிதா ஜே ஏ பிரான்சிஸ் அடிகளார் மங்களவிளக்கேற்றி வைத்தார்.

திரு வி. எம். ஜெரூட் கருத்துரை வழங்குகையில்; ''பண்டைக்கால எமது மூதாதையர்களது வரலாற்று வடிவங்களைக் கவிஞர் தேவதாஸன் தற்கால இளைஞர் சமுதாயம் அறியக்கூடிய விதத்தில் நாட்டுக்கூத்து வடிவில் ஆக்கியுள்ளார்'' என்றார்.

திரு. ஞா. மரியதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஈச்சமோட்டை கிராம சேவையாளர் திரு எம். சுந்தரலிங்கம் கருத்துரை வழங்கினார்.

கவிஞர் தேவதாஸன் நன்றி கூறினார். (இ-51)

### விபரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

அரியாலை பிரஜைகள் குழுவினர் தமது பகுதியில் 1981 ஆம் ஆண்டுக்குப்பின் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகிறார்கள்.

தமக்கு ஏற்பட்ட இழப்புகளை எழுத்து மூலம் சனசமூக நிலையங்கள் ஊடாக அல்லது தம்மிடம் நேரடியாக சமர்ப்பிக்கும்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கொத்தணி அமைப்பு இராம மக்களிடையேயும் நல்லுறவை ஏற்படுத்துகிறது

யாழ்ப்பாணம், ஜூன்14

''கொத்தணி அமைப்பானது பாடசாலைமாணவர்களிடையே மட்டுமன்றி இராமமக்களிடையேயும் நல்லுறவையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளது

யாழ் பல்கலைக்கழகப் புவியியல் துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மண்டைதீவுமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மண்டைதீவு கொத்தணிப்பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மண்டைதீவு கொத்தணி அதிபர் திரு த. [illegible] தலைமையில் இடம்பெற்ற இப் போட்டியில் மண்டைதீவு கொத்தணியில் உள்ள ஏழுபாடசாலை மாணவர்களும் மூன்று இல்லங்களாகப் பிரிந்து போட்டிகளில் பங்கு கொண்டனர்.

போட்டிகளின் முடிவில் நீல இல்லம் இவ்வாண்டுச்சாம்பியனாயிற்று பச்சை, சிவப்பு இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களைப் பேராசிரியர் பாலசுந்தரப்பிள்ளை வழங்கினார்.

ஈற்றில் கொத்தணிச் சபையின் செயலாளர் திரு. செ. அந்தோனி முத்து நன்றி கூறினார். [இ]

### நல்லைங்காவல் பிள்ளையார் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார்கோவில் சம்புரோட்ச மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது

வெள்ளிக்கிழமை காலை ஐந்து மணி முதல் ஆறரை மணி வரையிலான சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான கிரியா நிகழ்ச்சிகள் இன்று புதன் கிழமை காலை 5 55 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகும்.

ஜூலை மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 45ஆம் நாள் மண்டலாபிஷேக பூர்த்தியும், சங்காபிஷேகமும் நடைபெறும். (உ)

### ஸ்ரீநாகவரத நாராயணர் கும்பாபிஷேகம்

அளவெட்டி, ஜூன் 15

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானப் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேக விழா இன்று புதன்கிழமை பகல் 10 30 மணிக்கு விக்கினேஸ்வர வழிபாட்டுடன் ஆரம்பமாகிறது.

கும்பாபிஷேகம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10-13மணிக்கு ஆரம்பமாகி 12 - 02 மணிவரை நடைபெறும்.

## வெள்ளைக் கொடி தினத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன்15

கோண்டாவில் கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கமும் வெள்ளைக்கொடி தினத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

இதனை உப செயலாளர் திரு ப. செ. இராசரத்தினம் இணைத் தெரிவித்தார்.

### குருநகர் புதிய சந்தை

குருநகர் புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கமும் இன்றைய வெள்ளைக் கொடி தினத்தை ஆதரித்து அறிக்கை விடுவுள்ளது (இ 51)

### சனசமூக நிலையங்களின் ஒன்றியம்

இன்றைய தினத்தில் இராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள், இல்லங்கள், கடைகள் ஏனைய பொது ஸ்தாபனங்களில் வெள்ளைக் கொடிகளை ஏற்றுவோம்.

இப்படியாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பொதுச் செயலவர் திரு சி. சி. வரதராசா விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### இந்து இளைஞர் பேரவை

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை பொதுச்செயலாளர் திரு இ. தவகோபாலும் இன்றைய வெள்ளைக் கொடி தினத்தை ஆதரித்து அறிக்கை விடுத்துள்ளார்.

### கட்டிபுரம் திருவிழா

செட்டிகுளம், ஜூன் 15

கட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவில் அலங்கார திருவிழா விசாகப் பொங்கலுடன் ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி அடைந்தது. [இ-5]

## மணிக்கூடு இல்லாத தபால் நிலையம்

யாழ்ப்பாணம் ஜூன் 15

சுண்டுக்குளி தபாலகத்தில் நேரம் கணிப்பதற்கு அலுவலக மணிக்கூடு இல்லை.

இரவல் கடிகாரத்திலேயே நேரம் கணிக்கப்படுகிறது.

இத்தகவலை சுண்டுக்குளி தபாலக அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ் கொழும்பு நேரடித் தொலைபேசிச் சேவையில் சுண்டுக்குளி தபாலகத்தில் இரண்டு தொலைபேசிகள் இயங்கி வருகின்றன

தொலைபேசி நேரங்களைக் கணிப்பதற்கு அங்கு மணிக்கூடு இல்லாதது பெரும் குறையாக இருந்து வருகிறது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்


# உதயன்

15 - 06 - 1988 புதன்கிழமை


எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## விடுதலைப் புலிகளுடன் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சங்கத்தை விட்டு வெளியேறி இந்தியாவிற்கும் பிறநாடுகளுக்கும் அகதிகளாகச் சென்று விட்டார்கள்.

குறிப்பாகச் சொன்னால் 1983 இல் இருந்து இன்று வரை வடக்குக் கிழக்கில் நடந்து வருவது இராணுவ ஆட்சியே.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் போலியாகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு, இராணுவ நிர்வாக அமைப்பு முறையின் கீழ் தேர்தல் நடத்துவதென்பது, தேர்தல் என்ற போர்வையில் கண்துடைப்பு நாடகம் நடத்தி மோசடி செய்து தமக்குச் சாதகமான பொம்மை நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையேயன்றி வேறில்லை.

எனவே வடக்குக் கிழக்கில் அமைதி திரும்ப வேண்டுமானால் சுமுகமான சூழ்நிலையில் தேர்தல் நடைபெற வேண்டுமானால்-

★ இந்தியா எந்தவித முன் நிபந்தனையுமில்லாமல் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்.

★ இராணுவ நிர்வாக அமைப்பு முறைகள் அகற்றப்பட்டு, ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பின் கீழ் சுதந்திரமான சிவில் நிர்வாக அமைப்பு முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ இடம் பெயர்ந்த அகதிகள் அவர்களது சொந்தப்பிரதேசத்திலே மீளக் குடியேற்றப்பட வேண்டும். மீளக்குடியேற்றம் என்ற போர்வையில் நடைபெறும் திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

★ இடைக்கால நிர்வாகத்தின் மேற்பார்வையில், புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

★ அரசியலமைப்புச் சட்டத்திற்கு கொண்டு வரவேண்டிய திருத்தங்களை உடனடியாகக் கொண்டுவந்து, தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கம், மற்றும் ஏனைய சிறுபான்மை இனக்குழுமங்களின் அடிப்படை உரிமைகளுக்கான சட்ட வரையறை என்பன அரசியல் அமைப்புச் சட்டரீதியாக உறுதி செய்யப்பட வேண்டும்.

இதைவிடுத்து போலியான தேர்தல் நடத்துவதென்பதோ, இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அப்பாவி மக்களையும், மக்களின் உரிமைக்காகப் போராடும் போராளிகளையும், கொன்று குவித்து அடக்கி ஒடுக்கி அடிபணியவைக்க நினைப்பதென்பதோ, இந்த நாட்டின் அமைதியையும் சகஜ வாழ்க்கையையும் நிரந்தரமாகச் சீர்குலைக்கும் ஒரு நடவடிக்கையாகவே அமையும்.

ஸ்ரீலங்கா அரசு உண்மையில் இந்த நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த விருப்பங் கொண்டிருக்குமாக இருந்தால், அது உடனடியாக விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி, புலிகளை நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைக்குமாறு இந்திய அரசிடம் கூறவேண்டும்.

மாறாக பிரபாகரனது வீழ்ச்சியே தனது வெற்றி என அது நினைக்குமாக இருந்தால்இந்தநாட்டில் அமைதியின்மை என்பதை நிரந்தரமாக வைத்திருக்க விரும்புகிறது என்றே பொருள் கொள்ளவேண்டும்.

- இப்படி தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-உ)

## தி.மு.க.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
ஒரே தலைவர் கலைஞர் தான்'' என்று சொன்னார்கள். அந்தக் கலைஞருக்கு நன்றி என்றும் சொன்னார்கள்,

நான் கால்நூற்றாண்டு காலமாக காங்கிரஸ்காரன். எந்த காங்கிரஸ் என்று கேட்டால் நேருவும் காமராஜரும் வளர்த்த காங்கிரஸின் தொண்டன். அப்படிப் பட்ட ஒருவன் மீண்டும் காங்கிரஸ் வரவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

அது வராது - கலைஞர் ஆட்சிக்கு வரப்போகிறார் என்று சொன்னபோது நான் மகிழ்ச்சியடையவில்லை நிம்மதி அடைந்தேன்.

ஏதோ பண்புள்ள ஒரு தமிழர் வரப்போகிறார். மகிழ்ச்சி பின்னால் வந்தாலும் பரவாயில்லை என்று நான் நிம்மதி அடைந்தேன்.

அவர் மீண்டும் வரப் போகிறார் என்பதுதான் எல்லோரும் எல்லா நாட்டிலும் பேசுகின்ற செய்தி இது மிகமிக உயர்வான நல்ல செய்தி.

அந்த பண்பு குலையாத கழகமாக தி. மு. க. உள்ளது.

இப்படி மணியன் பேசினார். (இ-எ)

## முல்லைத்தீவில்:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமான இந்தக் கறுப்புப்பட்டிப் போராட்டம் மூன்று நாட்களுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மக்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்தது மட்டுமல்லாது வாகனங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இதனிடையில் இந்தியப் படையினர் நேற்றும் சில இடங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என அறிய வந்தது. [ஒ-10]

## பலாலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வுள்ளவர்களுக்கான பிரவேசப் பத்திரம், நேரசூசி முதலியன கலாசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றைப் பரீட்சார்த்திகள் அதிபர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது (ஒ-எ)

## பருத்தித்துறை.

[1ஆம் பக்க தொடர்ச்சி]
யும், நடவடிக்கைகளையும் ஆட்சேபித்தே நேற்றைய ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழு இந்த ஹர்த்தாலை ஒழுங்குசெய்திருந்தது.

ஹர்த்தாலின் போது வீதிகளில் அமைதிப் படையினரின் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டிருந்தன,

நேற்றுப் பருத்தித்துறை நகரம் முற்றுமுழுதாக ஸ்தம்பித நிலையை அடைந்தது. (ஒ-10-160)

## நெடுந்தீவுக்கு [கப்பலில் சென்று தேடுதல்!

குருநகர், ஜூன் 15
கடந்த வெள்ளிக்கிழமை ஒரு கப்பலிலும், இரு ஹெலிக்கொப்டர்களிலும் நெடுந்தீவுக்கு சென்றிருந்த இந்திய அமைதிப் படையினர் அப் பகுதியில் முழு அளவில் சோதனை நடத்தினர். (ஒ-51)

## விஸ்வமடு...

1-ம் பக்கத் தொடர்ச்சி]
தெரிவிக்கின்றன.

இதனையடுத்தே நேற்று தீவிர சோதனை நடவடிக்கைகளும் தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று விஸ்வமடுப் பகுதியில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வாகனப் போக்குவரத்துகளும்ஸ்தம்பிதநிலையை அடைந்தன. (ஒ-10

## சிவாஜி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யாகக் கண்டிக்கிறது-

★ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதலை உடனடியாக நிறுத்தி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு இணங்கி வருமாறும், புதிய உடன்பாட்டைப் பிரபாகரன் ஒப்புதலுடன் உருவாக்க வேண்டும் என்றும் இந்த அரசை செயற்குழு கேட்டுக்கொள்கிறது-

★ இலங்கைத் தமிழர் விடயத்தில் நடந்து கொள்ளும் இந்திய அரசைக் கண்டித்து இம் மாதம் 15 ஆம் திகதி (புதன்) காலை 8 மணி முதல் மாலை 5 மணி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தமிழக முன்னேற்ற முன்னணித் தலைவர்கள் உண்ணாவிரதம் இருப்பதுஎன முடிவு செய்யப்பட்டது:

சென்னையில் கடற்கரை உழைப்பாளர் சிலை அருகில் தலைவர் சிவாஜி கணேசன் தலைமையில் உண்ணாவிரதம் நடைபெறும்-

இப்படி அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)

## எரிந்த சடலங்கள்

டயர்கள் போட்டு எரிக்கப்பட்ட இரண்டு சடலங்கள் குளியாப்பிட்டியில் இரியகொல்லை என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன:

அடையாளம் தெரியாத விதத்தில் சடலங்கள் எரிக்கப்பட்டிருந்தன என்று பன்னல பொலீஸார் தெரிவித்தனர். [ஒ-எ]


குழாய்க்கிணறுகள் அமைத்தல்
வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார், வவுனியா, மாவட்டங்களில் மெஷின்கள் மூலம் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு:—
லேபரர்ஸ்- Labourers
சுப்பவைஸ்சர்ஸ் Supervi o-s
Officers தேவை.
முன் அனுபவம் உள்ளவர்களாயின் விரும்பப்படும். உடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். Offieres க்கு அரசாங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற Typing தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு;
ROCK ENGINEERS
PT. PEDRO Rd, KOPAY
(4287)



யாழ்-கொழும்பு
விமான சேவை

இன்று புதன்கிழமை வெற்று ஆசனங்கள் உள்ளன. பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

MACK TRAVELS
இல 8, முதலாம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C- 5462)



உ
நயினாதீவு
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
வருடாந்த மஹோற்சவம்
1988
பிரயாணிகளை ஏற்றி இறக்கும்
படகுச் சொந்தக்காரர்களுக்கான
அறிவித்தல்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் மகோற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் நலன் கருதி பிரயாணிப் படகுகள் போக்குவரத்துப் பற்றி பின்வரும் நடைமுறைகளை சுங்கத் திணைக்களம் அமுல் நடத்தத் தீர்மானித்துள்ளது.

(1) கடலில் பிரயாண சேவைக்கு தகுதி வாய்ந்தது என உறுதிப்படுத்தப்பட்ட படகுகளே யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்கு சேவைக்கு விடப்படல் வேண்டும்.

(2) பிரயாணிகளின் உயிர் உடல்நலன்கருதி படகில் மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

[3] பிரயாணிகளின் நலன் கருதி படகுச் சொந்தக்காரர்கள் தங்கள் படகுகளில் முதலுதவி பருத்துவ சேவைப் பொருட்கள் வைத்திருத்தல் வேண்டும்.

சுங்கச் சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கைகள் தவிர்க்கும் பொருட்டு மேற் கூறிய முறைகளை பேணும்படி படகுச் சொந்தக்காரர்கள் வேண்டப்படுகின்றனர்.

சுங்க அலுவலகம், யாழ்ப்பாணம். 1988 ஜூன். 13.
த. கணநாதலிங்கம், சுங்க உதவி சேகரிப்பாளர். யாழ் மாவட்டம்.
[C 5461]



அற்புத இரவு

பாவம், சாபம், பிசாசு, வியாதி, எல்லாவற்றிலிருந்தும் இயேசு விடுதலை அளிக்கிறார்.

இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு உங்களை அழைக்கின்றோம். -இலவசம்-

அசெம்பிலி ஒப் கோட்
14, இராசாவின் தோட்டம்
யாழ்நகர்.
[4378]



ஹோம் பினன்ஸ்
வைப்பாளர் கூட்டம்

என்னிடம், தங்கள் வைப்புப் பத்திர போட்டோ ஸ்ராற் பிரதிகளைத் தந்தவர்கள் மட்டும் அடங்கிய கூட்டம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 18.6.88 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

சதா. ஸ்ரீநிவாசன்
வழக்கறிஞர், அட்வகேட்
(4455)



காசிலிங்கம் ஞானசூரி
(நயினாதீவு)

நயினாதீவு காசிலிங்கம் ஞானசூரி 14-6-88 நயினாதீவில் காலமானார். இவர் நயினாதீவு சரவணமுத்து காசிலிங்கம், பெரியநாயகி தம்பதிகளின் அன்பு மைந்தனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகுமாரின் தந்தையும், நயினாதீவு மூ. இராமலிங்கத்தின் மருமகனும், Dr. K. மனோகரன் சரவணமுத்து, Dr. K. விக்னேஸ்வரன், Dr. K. புஷ்பராஜா, குகபாலன், சிவஞானபூசணி (யாழ். பல்கலைக்கழகம் பௌதீக பீடம்), ஹரிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (15- 6- 88) நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
ச. செல்லத்துரை
(4456)



மரண அறிவித்தல்கள்

வீரகத்தி சின்னாச்சி

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அச்செழு வாசியுமான சின்னாச்சி காலமானார். இவர் காலஞ்சென்ற வீரகத்தியின் மனைவியும், காலஞ்சென்ற சிதம்பரி மட்டுவில், சீனிவாசகம் உரும்பராய், கந்தையா மலேசியா, பூரணம் உரும்பராய் ஆகியோரின் சகோதரியும், இராசையா மலேசியா நல்லையா, இராசேந்திரன் உரும்பராய், தம்பையா அச்செழு, கோபாலசிங்கம் தம்பாலை, செல்லம்மா, தங்கம்மா, நல்லம்மா, இராசம்மா மலேசியா ஆகியோரின் தாயாரும்,

அப்புக்குட்டி காலஞ்சென்ற வைரமுத்து, சேகரம், வல்லிபுரம் மலேசியா, சரஸ்வதி, சின்னம்மா, நாகம்மா, பாக்கியம், சுலோசனா ஆகியோரின் மாமியாரும்,

நற்குணம் (கனடா), திருச்செல்வம் (நோர்வே), யோகநாதன் (ஜேர்மனி) முருகையா (லண்டன்), இளங்கோவன் (ஜேர்மனி), மதிவாணன் (கனடா) இராசதுரை, டாக்டர் கமலநாதன் (லண்டன்)பாஸ்கரன் புலேந்திரன் (மலேசியா) பாலச்சந்திரன் (லண்டன்), மனோகரன், கண்ணன் (அமெரிக்கா), ரவீந்திரன் (கனடா), அருந்தவம் (கனடா), சுரேஷ் ரமேஷ், அனுரா (தம்பாலை), தேவராணி ஞானேஸ்வரி, பத்மினி, ராஜேஸ்வரி, அல்லிராணி, பவளக்கொடி, மல்லிகா, சித்ரா, கமலாதேவி, சரோஜினி, நிர்மலா (மலேசியா), அம்புஸம், அமுதா, முல்லைநாயகி, சாந்தி, பவானி, வாசுகி, தவராணி, மாலினி, வந்தனா சோபனா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரது தகன கிரியை 16-6-88 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அச்செழு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அனைவர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தகவல்:- எஸ், வி தம்பையா
அம்பிகா இல்லம்
அச்செழு, நீர்வேலி.
(4294)



C. J Gnanaratnam

தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற A C. செல்லப்பா (Overseer P.W.D) லில்லி அன்னம்மா அவர்களின் அன்பு சுனும், Christine செல்லம்மாவின் அன்புக்கணவரும்' Serena, Nesan, Vino, Edward ஆகியோரின் அன்புத்தந்தையும், தேவப்பிரியன் ஆசிர்வாதம், Iau de Silva, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற C.S பொன்னுத்துரை, திருமதி E.R குணநாயகம் (Seychelles) செல்வி G. R செல்லப்பா (இளைப்பாறிய விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி கோப்பாய்) காலம்சென்ற C. E குணரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் Violet பொன்னுத்துரை, காலம் சென்ற Stickney குணநாயகம், மேரி ராசமலர் குணரத்தினம், நல்லம்மா அன்னம்மா ராசலட்சுமி காங்கேசு ஆகியோரின் அன்பு மைத்துனருமாகிய செல்லப்பா Joseph ஞானரட்ணம் அவுஸ்திரேலியாவில் 6- 6- 88 அன்று காலமானார் என்பதை உற்றார், உறவினர் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
செல்வி G. R செல்லப்பா.
பிரதான வீதி,
தெல்லிப்பளை.
(4291)



திருமதி கந்தையா நாகம்மா

நல்லூர், செட்டித் தெருவைச் சேர்ந்த திருமதி கந்தையா நாகம்மா 14- 6- 88 இல் காலமாகிவிட்டார். இவர் திரு கந்தையாவின் அன்பு மனைவியும், கணேசலிங்கம் (ஞானம்ஸ்) சுந்தரலிங்கம் (பொறியியலாளர் U. K) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தவமணிதேவி, திருமதி மோகனாம்பிகை (U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேந்திரன், நரேன், அருணன், மயூரன், பிரதாபன், தேவஜனன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 15- 6- 88 இன்று பி. ப. 3 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. கந்தையா
க. கணேசலிங்கம்
மகன்
இல 40, செட்டித்தெரு,
நல்லூர்.
[4457]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 15-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd, 92/2, Navalar Road, Jaffna on Wednesday, 15 th June 1988;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org